சாக்கடைப் பூக்கள்

Pax Ravichandra

pax.ravichandra@gmail.co

29-1-2024

சாக்கடை மலர்கள்	
இல	உள்ளடக்கம்
1	கண்ணாளனே
2	கணணெதிரே தோன்றினாள்
3	கறுப்பு மனிதன்
4	கறுப்பு வெள்ளை மனிதர்கள்
5	காதல் எனும் கனவு
6	காதல் பெண்ணே
7	காதல் புதை மணல்
8	காதல் ரோஜா
9	காதலர் தினம்
10	காதலில் விழுந்தேன்
11	காதலின் மறு பிறப்பு
12	கவிதையும், கீதையும்
13	கொள்ளை அழகு
14	கொரோனா
15	கோவிட்19
16	கூடாரவாசிகள்
17	குழந்தைச் செல்வம்
18	குழந்தையும் தெய்வமும்
19	குமுறல்
20	மலர்வனம்
21	மன்னின் நட்பு
22	மனோ
23	நன்றி
24	நட்பு
25	உறவும் பிரிவும்
26	நீலோற்பலம்
27	பச்சைக் கிளி
28	பார்த்தேன் இரசித்தேன்
29	பெண்மையின் மேன்மை
30	சாக்கடை மல்லிகை

கண்ணாளனே

கண்ணாளன் அணைப்பின்றி கட்டுடல் நலிய
மையின்றிக் கயல்விழிகளும், மலரின்றிக் கார் குழலும் சோர
குமுத வாய் அமுது சுவைக்காது வாட-பொட்டின்றி
வாடும் நுதல்-உன் கரம் பற்றாது மெலியும் கொடியிடை

பசி மறந்தேன், பஞ்சணை மறந்தேன் உன் நினைவால் வாடி-
நடு நிசியிலும் உறக்கம் துறந்தேன், பண்ணால் உன்னைப் பாட
கண்ணால் உன் அழகைப் பருக-கண்ணாளனே
ஏன் மறந்தாய் என்னை கோகிலம் கதறுகிறேன்

கண்ணில் நீர் எழுதி, கவிதையில் துயர் எழுதி
நெஞ்சில் உன்னை எழுதி-மனமோ
மந்திரமாய் உன் பெயரை உச்சரிக்க என்
காதல் தவங்கள்

விற்கோலமாய் புருவங்கள்-மீனாட்சி
விழிக்கோலங்களிலோ-கண்ணீர் மழைக்காலங்கள்
சொற்கோலத்திலோ கோகிலத்தின் கானங்கள்
மெய்க்கோலத்திலோ சொர்க்கலோகங்கள்

எண்ணமெல்லாம் நீயாக, இதயமும் உனதாக
என் இருப்பும் உனக்காக, தூக்கம் மறந்து
சோகப் பண்ணிசைத்து காத்திருக்கும் நொடிப் பொழுதும்
பல யுகங்கள், கண்ணாளனே வருவாயா?
காதல் தருவாயா? என் தவங்கள்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19.06.2023

கண்ணெதிரே தோன்றினாள்

வண்ண ஓவியமோ?, அழகின் நூதன காவியமோ?
காமன் மகளோ? காம சூத்திரத்தின் அதிசய பாவமோ?
பார்த்த விழிகளும் இனிக்கப் பசும் பாலோ?. நறுந்தேனோ?
பூத்த அழகில் மனம் லயிக்க- ஐம்புலன்களும், ஆறறிவும்
மயங்க இன்பத்துப்பாலாய் என் தேவதை

பொட்டு வைத்த வட்ட நிலவு
என் நெஞ்சை தொட்டுப் பார்த்த பேரழகு.
விரித்த கூந்தலில் மல்லிகை மணம்
குவிந்த செவ்விதழ்களில்
கொட்டிக்கிடக்கும் தேன் குணம்

வாசப் பூமேனியோ பேரழகின் இனம்
கண்களில் குவளை வனம்
கன்னச் சிவப்பினில் ரோஜாவனம்
வெள்ளைச் சிரிப்பில் முத்துச்சரம்

இருக்கும் பாவத்தில் இவளோ காதலின் நந்தவனம்
இடையோ மின்னல்-நடையோ நாட்டியம்
காமன் படையாய் இவள்-என்னைக் காதலில்
வீழ்த்திய மன்மதன் மலர்கணையாய் இவள்

முடி மதல் அடி வரை சந்தனக்காப்பை மனம் சாத்த
காதல் தேவதையைக் மனம் போற்ற
கண்படும்-நிறை அழகிற்கு ,நிறைகுடங்களாய்
பொன்முலைகளை வைத்த இறைவனை துதிக்கும் மனம்

கவி பாட மனம் கம்பனை அழைக்க-செவ்வாய் மது பருகாமல்
என் மனம் போதையில் தள்ளாட, ஆடை மூடிய அழகில்
கன்னியோ பௌர்ணமி-காதல் வாடை வாட்டிடக்
காளை மனம் கொட்டும் ஆனந்தக் கும்மி

படிக்கும் பாவத்தில்-என் நெஞ்சம் படபடக்க
துடிக்கும் உள்ளமோ-மனதில் பூவையை சிறையெடுக்க
துடியிடையும், எழில் வடிவும் தூக்கத்தை கெடுக்க
கனவிலும், நினைவிலும் காதல் நோய் வருத்த வாடினேன்

நூல் படிக்கும் அழகை நான் படிக்க
காம சூத்திரத்தை நாம் படிக்க
காதல் கவிதை வடித்து தூது விட்டேன்
கன்னி படித்து காதலாகி என்னைச் சிறையெடுக்க

கண்ணெதிரே தோன்றி-கலையழகைக் காட்டி
காளை மனதில் காதல் பூ சூடினாள்
மஞ்சத்து மலரை நெஞ்சத்தில் சூடு
மன்மதனாய் மாறி உந்தன் ரதி என்னைச் சேரு

காமத்துப்பாலை பருகி வள்ளுவனே வாசுகியைக் காணு
காமசூத்திரம் என்னில் படித்து இன்பம் சுவை, மோகம் கழை
காதலின் தவநிலைகளை காண கஜீராகு சிற்பங்களாய் நாம் மாற
காமம் கடந்து காதலில் நிலை, காதலே கடவுள் நிலை

இவளின்றி வாழ்வில்லை என்றே மனம் மயங்க
சூடிக் கொடுத்த ஆண்டாளாய் -அன்பால்
தனைச் சூடக்கொடுத்த பெண்பால்
என் என்பால் இறை உருவாக்கிய ஏவாள்
கண்டேன் காதலில் மலர்ந்தேன்.

இவள் காதல் வானில் வளர் பிறையாகி
இவள் நூலகத்தில் காதல் நூலானேன்
பிறை நுதலில் திலகமாகி
நிறை அழகைத் தழுவத் தென்றல் ஆனேன்

பூந்தேவிக்கு கலிங்கமாகி-பொன்மேனி
பூசிட வாசச்சந்தனமானேன், கார்குழலில் மலராகி
கால்களுக்கு கொலுசானேன்
கலையாத அழகின் நெஞ்சுக்குள் காதலன் ஆனேன்
காதல் தேவதைக்கு தேவனுமானேன்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19.06.2023

கறுப்பனும் மனிதனே-BLACK LIFE MATTERS

அநாதரவாய், தெரு நாயாய் உன் நிறத்தால் நீ துன்புறும்போது
எழுப்பிடும் உன் அவலக்குரல் வானைத் தொடும்போது-எனக்கும்
வலிக்கின்றது- என் குரலும் உன் குரலோடு சேர்ந்தே ஒலிக்கின்றது-
ஏனெனில ***நானும் கறுப்பனே*** நண்பா

தோல் நிறம் தாண்டிய துயரத்தில்-என் இதயம் நொந்திட,
என் கண்ணீரிலும் உப்புக் கரித்திட-வெள்ளை
நிறவெறியர் சிலுவையில் நித்தம் நீ அறைபடும்போது-
கறுப்பன் எனக்கும் மூச்சு முட்டுகின்றது

கடவுள் தந்த இலவசக் காற்றை சுவாசிக்க-கறுப்பன்
எனக்கும் உரிமையுண்டு, ***என் கழுத்திலிருந்து -வெள்ளையனே***
உன் காலை கொஞ்சம் தளர்த்தமாட்டாயா மனம் கதறுகின்றது.

வெள்ளைப் பொலிஸாரின் வேண்டாத வன்முறைக்கு-நாளும்
நீ பலியாகும்போது-கறுப்பன் என் உயிர் துடிக்கின்றது
மூச்செடுக்க முடியாமல் என் கழுத்தை நிறவெறி நசுக்கும்போது
ஏலி, ஏலி லமா சபக்தானி மனம் இயேசுவாய் கதறுகின்றது.



இறைவன் மனிதரைத் தம் சாயலாய்ப் படைத்தான்-
விவிலியம் சொல்வது உண்மையானால்-இறைவன்
கறுப்பு பாதி வெள்ளை பாதி கலந்த நிறக்கலவையா?
நாங்களும் இறை மக்கள் அல்லவா?

வெள்ளை மனிதர்களே-கறுப்பர் நாமும் மனிதர்களே
கறுப்பு. வெள்ளை அழகிய தோல் நிறங்களே
அன்பு, காதல், பாசம், நேசம் அழுகை, சிரிப்பு
எல்லாம் நிறங்கடந்த உணர்வு நிலைகளே

துடிக்கும் இதயமும், துன்புறும் மனமும் ஒன்றே
நம்முள் ஓடும் குருதியும் உலாவும் காற்றும் ஒன்றே
ஏனோ இந்த ஏற்றத்தாழ்வுகள்? நிறவேற்றுமைகள்

காற்றும், மண்ணும், நீரும், நெருப்பும்.
ஆகாயமும், கடலும் எல்லோருக்கும் ஒன்றே
உயர்வு தாழ்வு உள்ளத்தளவே-
உடலின் நிறத்தில் அல்லவே

பாலும், கள்ளும் நிறத்தில் ஒன்றானாலும் குணத்தில் வேறு
வெண்முகிலும்- கார்முகிலும் நிறத்தில் வேறானாலும்
நீராவிதான் என்பது நிதர்சனமே
இருளும், ஒளியுமாய் சுற்றும் உலகம்-அதுவே இன்பம்

வாழ்வு, தோல் நிறம் சார்ந்தல்ல, மன நிறைவின் சாரம்
அன்பு மனதிற்கு நிறம் தெரிவதில்லை

எங்கள் வாழ்வு எங்கள் கையில்-
எங்கள் சாவோ இறைவன் கையில்
எங்களை வதைப்பதில்-என்ன இன்பம் கண்டீர்?

பசிக்காய் வேட்டையாடும் அரியும், புலியும்-
வீணே மிருகங்களைக் கொல்வதில்லை
விலங்குகள் கொலைகள் புரிவதில்லை-கொலை
புரிவதில், மனிதனுக்கு நிகராய் யாருமில்லை

எங்கள் வாழ்வும், உங்கள் வாழ்வைப்போல் புனிதமானது.
வாழ்வே இறைவன் எங்களை வாழவிடுங்கள்–நீதிக்காய்
குரல் கொடுக்கும் வெள்ளைச் சகோதரங்களும் உண்டு
அவர்களுக்குத் தோலும் வெண்மை, மனமும் தூய்மை

துயரச் சிலுவையை-தோள் சுமக்காதவரை துன்பம் புரிவதில்லை
கறுப்பர் துயரும் உங்களுக்குத் தெரிவதில்லை
நிறமூர்த்தங்களை மாற்ற மூர்த்திகளுக்கும் வழியில்லை
சிவனும், பிரம்மனும் சிவப்பு-ஸ்ரீராமனும்
யமனும், கண்ணனும், காளியும் கறுப்பு

இயேசுவோ யூதன்- பெருமான் புத்தரோ நேபாளி
நபிகளோ அரேபியன் என்றால்
அன்பிற்கும் உண்மைக்கும் நிறமென்ன? இனம் என்ன?
சுவை என்ன? இசை என்ன? மொழி என்ன?

சாதி, மதம், நிறம், இனம் கடந்தவனே மனிதன்-
இயற்கைக்கு இவை ஏதுமில்லை
இருப்பே இறைவன்-நாம் இறைமக்களே
நீ என் சகோதரனே!

இன்பமே சூழ்க–எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra–19.06.2023

கறுப்பு வெள்ளை மனிதர்கள்-George Floyd

நிறவெறியின் நீங்காத இருள் வெள்ளையர் மனங்களை ஆள
வெள்ளைப் பொலிஸாரின் அராஜகம் கறுப்பர்களை பலி கொள்ள
தெருவில் பறை நாயாய் Gerorge Floyd இன் மரணம்

மண்டியிட்டு, கழுத்தில் ஒன்பது நிமிடங்கள் முட்டியிட்டு
கழுத்தை நெரித்து உயிரைப் பறித்த வெள்ளையன்-கறுப்பன்
உயிரிழப்பிற்கு கதை ஜோடித்து நீதியை பழித்த கொடியவன்

வெள்ளை ஏகாதிபத்தியம் விரிந்து பரவ-புதிய உலகில்-
வெள்ளையர் பொருளாதாரம் செழித்து ஓங்க
ஆபிரிக்க சுதேசிகளை விலங்குகளாய் வேட்டையாடி
அடிமைகளாய் விற்ற அராஜகம்-புது உலகத்தின் பெருவணிகம்.
பிரான்ஸ், பிரித்தானியா எனத் தீய்த்த நிறவெறியோ வெள்ளை
வெந்து கருகிய அடிமை மானுடமோ கறுப்பு

கறுப்பர்களைக் கொத்தடிமைகளாக்கி
உழைப்பை உறிஞ்சி-சக்கையாய்த் துப்பி
தீண்டத்தகாதவர்களாய் நடத்திய பாரோக்கள்
கண்டும் காணாத வெள்ளைப் பாப்பரசர்கள்





அடிமைச் சந்தையில் மனிதர்களோ கறுப்புத் தங்கம்
கிறிஸ்தவ மதச்சந்தையில் -மதமாற்றத்திற்கு
கறுப்பு அடிமைகளோ இறை மக்களின் புதிய அங்கம்

“எஜமானே கடவுள் ” சாத்தானின் வேதம்-இறை வேதமாக-
அடிமைகளுக்கு விவிலியம் சொந்தமானது-
உழைப்பை உறிஞ்சும் அட்டை முதலாளிவர்க்கத்திற்கு
அடிமை வியாபாரம் சொத்தானது-அபினியும்,
போதையுமாய் மதம் வரலாற்றில் உண்மையானது.

ஆபிரகாம் லிங்கனின்-விடுதலை சட்டம்
கறுப்பு அடிமைகளுக்கு வரப்பிரசாதமான சுதந்திரம்
அன்னாரைப் பலி கொண்டும் அடங்காத நிறவெறி
தென் ஆபிரிக்காவை ஆட்டிப் படைத்த சர்வாதிகாரி

பொருள் தேடி வந்த வெள்ளை குடியேறிகளுக்கு
பிரஜா உரிமையும், பண்ணை நிலங்களும் உரித்தாக
உழைப்பையும் உயிரையும் ஈந்த கறுப்பனுக்கோ
அடிமை வாழ்வும், புதைகுழியும் பரம்பரைச் சொத்தானது





கறுப்பு அழகிகள்-வெள்ளையன் காமப் பசிக்கு
நொருக்குத் தீனியாக- பிறக்கும் கலப்பு இனம்,
கறுப்பு அடிமை என்பது சட்டமானது.

நிறவெறிச் சுனாமியை எதிர்த்து நீச்சல் போட்ட
கறுப்பினத் தலைவர்களும் மடிந்திட
கரை காணாத தொலைவில் கரைசேரத் தவித்து
கண்ணீரில் மூழ்கும் அப்பாவிக் கறுப்பர்

மனிதனை தன் சாயலாக படைத்த இறைவன்
கறுப்பனா? வெள்ளையனா? புரியாத நிலை
தோல் கடந்தால் உறுப்புக்கள் எல்லாம் ஒரே நிறம்
அடிமையின் குருதியும் சிவப்பு ஆச்சரியம்?



"நாம் கடவுளை நம்புகின்றோம்"-வாசகம்
அமெரிக்க டொலரில் அச்சானது-வெள்ளையனுக்கு
காசேதான் கடவுள் என்பது நிதர்சனமானது.

வெள்ளை கிறிஸ்தவப் பாரோக்களிடமிருந்து
கறுப்பு அடிமைகளை காக்கத் திராணியற்ற இறைவன்
யூத இனத்தை மட்டும் தெரிந்தான் என்றால்
இனவெறி பிடித்த கடவுள்-நிறவெறி பிடித்த தெய்வம்
அடிமைகளுக்கு ஏனோ? கடவுளும் புராணக் கதைதானோ?

மண் சிவக்கச், சிறக்க-கறுப்பு அடிமைகள் சிந்திய குருதி
கங்கையாய்ப் பெருக்கெடுக்க-வெள்ளையர்
கரங்களில் கழுவியும் போகாத கறுப்பனின் குருதிக்கறை
இன்றும் தொடரும்-காயின் ஆபேலைக் கொல்லும் அவலக்கதை

வேலைவாய்ப்பு. கல்வி, சமவாய்ப்பின்மை கறுப்பருக்கு சவாலாக
நூற்றாண்டு காலம் போனபின்பும் வெள்ளையர் செல்வத்தில் செழிக்க
கறுப்பர் வறுமையில் வாடிக்கருக, கொள்ளை நோயாய்
கறுப்பர் சமூகத்தை வருத்தும் தற்கொலைகள், குற்றச் செயல்கள்

கறுப்புத் துயரங்கள்-வெள்ளையர் கண்களுக்கு தெரியவில்லை
கல்லான இதயம் நெகிழ- ஓதிடும் வேதமும்
அடிமைத்தனத்தை ஆதரித்த அண்ணக நிலை

இருண்ட பிரபஞ்சத்தில் ஒளி உண்டாகுக என ஓங்கி உரைத்திட
இறைவனாய் யாருமில்லை, உண்மையை மறுதலித்து
பொய்மையை வாஞ்சிக்கும் அவல நிலை
அரியணையில் அராஜகம் முடி சூடிய நிலை

அன்பே தெய்வம் -உண்மையே விடுதலை
இன்றும் மானுடம் அறியவில்லை?-இன்றும்
வல்லமையே உண்மை எனும் மாயநிலை





நிறவெறியின் வெம்மை எங்கும் பரவிட
தென்னாபிரிக்க நிறவெறி காந்தியை சுட்டுத் தகித்திட
நெல்சன் மெண்டலாவின் 27 வருட சிறைவாசம்
வெள்ளையர் நிறவெறியின் துர்வாசம்

அகாலமாய் பொலிஸ் தடுப்பு காவலில் மடிந்த
432 அவுஸ்திரேலியப் பழங்குடிகள்
நீதிக்கான போராட்டங்களை ஒடுக்கி
உண்மையை மறைக்கும் நிறவெறி வெள்ளையர்கள்



மடிந்தவனுக்காய், நீதி கேட்ட போராட்டங்களை
இராணுவத்தால் அடக்க முற்பட்ட டிரம் அரசு
வெள்ளை இனவாதத்தின் முரசு?

நான்கு நூற்றாண்டுகளுக்கு மேலாக
இழிந்த அடிமை வாழ்வு வாழ்ந்த மக்களுக்கு
எந்த இழப்பீடும் அமெரிக்க அரசு வழங்கவில்லை
இழைத்த மனித உரிமை மீறல்களுக்காய்
மன்னிப்போ, வருத்தமோ கோரவில்லை

சுதேசித் தெய்வங்களை வழிபட்டபோது
ஆபிரிக்க கறுப்பர்களோ சுதந்திர மனிதர்கள்
கிறிஸ்தவக் கடவுளை வழிபட்டபோது
கறுப்பர்களாய்க் கொத்தடிமைகள்

ஏலி ஏலி லமா சபத்தானி
கூ குளக்ஸ்கானின் அக்கினிச் சிலுவையில்
அறையுண்டு கதறும் கறுப்பு அடிமையின் கூக்குரல்
கல்லாய், உப்புச்சிலையாய் மாறிட்ட
இறைவனின் அவல நிலை

மண்ணால் குயவன் செய்த்த மட்பாண்டம்
வெந்து கருகிட- கறுப்பனானது-அரை வேக்காடு
வெள்ளைனானது, முறையாய் வெந்ததோ மனிதனானது

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-20-06-2023

வண்ணக் கனவு காதல்

கண்ணீரில் கரையும் மையும், கணை பட்ட கலைமானாய்
வருந்தும் நெஞ்சும் காதற் சோகம் சொல்ல
தனிமைத் தவமிருக்கும் காதல் நெஞ்சம்
துணையைத் தேடி ஒற்றைக் குயிலாய் கரையும்

கேவிக் கரையும் சோகத்தில் ஒற்றைக் குயிலின் ஓலம்
கனக்கும் நெஞ்சத்தில் காதல் கலைந்த பாவம்
தனிமையில் அலையும் வான் நிலவோ வளர் பிறை
கண்ணீர்த தவமிருக்கும் பெண் நிலவோ காதல் தேய்பிறை

புண்ணான நெஞ்சம் புன்னகை மறக்க
பொன்மேனி தழுவி, காதல் சொன்ன கண்ணான உறவு
கனவாய் கலைந்து, பழங்கதையாய் மாறிட
நாளும் சோகத் தீ மிதித்து வாடும் பெண்மை

இதயங்கள் கலந்த இனிய காதல் சங்கமம் வற்றிட
வரண்ட நெஞ்சம் காதல் மழைக்காய் ஏங்கிட
காதலர் மரித்தாலும்-காதல் மரிப்பதில்லை
நேசம் மாறினும், நெஞ்சம் மறப்பதில்லை நிஜமானது.

காதலும் ஒரு பருவகாலம்-இளமையும்,
முதுமையும் மெய்யேந்தும் பொய்க்கோலம்-
விழிப்புணர்வே வழிப்பயணத்திற்கு ஞான ஒளி
வாழுங் கலையோ தியானத்தின் வழி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-20-06-2023

காதல் பெண்ணே

தென்றலாய் விழிகள் பூவையைத் தழுவிக் களிக்க
தேன் சிட்டாய் பொன் மலரைச் சுற்றி மனம் ரீங்காரம்
இசைக்க, காதல் கடலில் நீந்திக் களிக்கும் இதயம்
கவிதை பெருக்கெடுக்க கவிஞனாய் என்தன் புது உதயம்

திங்கள் முகமும்-செவ்வாய் இதழ்களும், கிள்ளை மொழிகளும்,
வெள்ளை மனமும், அன்ன நடையும், அலங்காரச் சின்ன இடையும்
காதற் சுரத்தைக் கூட்டக், கவிபாடும் மனதில் கம்பன்,
காமத்துப்பால் வேண்டி தவமிருக்கும் குணத்தில் வள்ளுவன்

மஞ்சன நீராடி, சந்தனம் பூசி, அஞ்சனம் தீட்டிய விழிகள்-
காதல் வந்தனம் கூறிடும் கிள்ளை மொழிகள்
நர்த்தனம் ஆடும் பூஞ்சடைகள், நடையில் பரதத்தின் பாவநிலைகள்

கள்ளினும் போதை மைவிழிகள், விரித்த கார்குழலில் கலாபமயிலின் நிலைகள்
புள்ளிக்குயிலின் இசை மொழிகள், புன்னகைப் பூச்சொரியும் செவ்விதழ்கள்
நெஞ்சுக்குள் மலர்ந்த காதல் செந்தாமரை, கனவிலும், நினைவிலும்
காதலில் நீராடக் கன்னியோ நெஞ்சுக்கள் பெய்யும் பூ மழை

நூலிடையில் ஆடும் மேகலை மாதவியைச் சொல்ல
செம்பாதங்களில் சிணுங்கும் சிலம்புகள் கண்ணகியை வெல்ல
நாணத்தில் சீதை, நளினத்தில் தமயந்தி,
காதலில் என்னை வீழ்த்திய காளிதாஸனின் சாகுந்தலை

பூ முகமும் , தேன் சிந்தும் செவ்விதழ்களும் என்னைக் கொல்ல
வளையாலாய் என்னை மாட்டிக் கொள்-பொன் மார்பில்
வண்ணமலர் மாலையாய் என்னைச் சூடிக்கொள்
வைதேகி மனம் விழிகளால் காதல் கவிதை சொல்லியதே

நூலிடையில் நூதனமாய்க் கை வைத்துப், பிறை நுதலில்
முத்தத்தால் திலகம் வைத்து-வண்ண இதழ்களில்
காதல் மது உண்ண, வரம் தா வண்ணத் தமிழ் பெண்ணே
மனம் கெஞ்ச-விழி கொஞ்ச நாணிச் சிரித்த மங்கை
காதலாகி என்னை அள்ளி அணைத்த தேவநங்கை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-20-06-2023

காதல் புதைமணல்

குப்பைகளும், கூழாங்கற்களும் மலிந்த உலகில்
மண்ணில் புதைந்த வைரமாய் நீங்கள்-
மைவிழி மாதர் கண்பட்டு மனம் புண்படாதிருக்க,
வெண் தாமரைபோல் வாழ்வு, அன்பிறைவனின் ஆதரவு

கயல்களால் என்னை உண்டு காதல் பசியாற்றும் பெண்ணோ
காதல் பெருவிருந்தாய் கண்முன் அமர்ந்திருக்க-நெஞ்சம்
காதல் நோயுற்று தவித்திருக்க மையெழுதிய விழிகளால்-
என் நெஞ்சில் காதல் மொய் எழுதிய பாவை

நெய் வார்த்த கூந்தலில் நித்தம் புது மலர் சூடும் கன்னி
என் நெஞ்சம் புத்தம் புது மலராய்ப் பூத்து விரிய-ஒரு பூவாய்
என்னைச் சூடிக் கலைய -பொய்யாய்க் காதல் சொன்ன பூவை

கண்மறைந்த கன்னியிடமிருந்த வந்த பூ மடல்
உள்ளதெல்லாம் உங்களோடு பகிர்ந்து கொள்ள ஆவல்
அதிலும் என் இதயத்தை-படித்தவன் மனதில் பூத்த காதல்
பதில் எழுதிய காதல் மடலுக்கு மௌனமே பதில்

கன்னியரோடு பழகவில்லை-அதனால்
கன்னியரைப் புரிந்திடும் பக்குவமில்லை
நான் எழுதியது காதல் அல்ல-நட்பு
வந்த பதிலோ துவர்க்கும் உப்பு

ஏனடி உன்னைப் பார்த்தேன், நெஞ்சைப் பறி கொடுத்தேன்
கன்னியர் நெஞ்சம் காதல் புதைமணல் என்றறியாமல்
காதலில் வீழ்ந்தேன், காதலும் பொய்யாக,
உள்ளமோ ஆறாத ரணமாக, உயிர் நொந்து. மெய் வாடி
ஓர் தேவதாஸ் போலானேன் என் பார்வதி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-20-06-2023

காதல் ரோஜாவே

கண்களில் கங்கை பெருக்கெடுக்க
நெஞ்சத்தில் சோக எரிமலை குமுறிக் கொந்தளிக்க
மண்ணும் பிளந்து என்னை விழுங்காதோ?
விண்ணும் விழுந்து என்னைக் கொல்லாதோ?

என் மனம் அனலில் விழுந்த புழுவாய்த் துடிக்க
கனவாய் கலைந்து -நினைவாய் மாறிட
அன்பு மனைவியும் ஆசைக் குழந்தையும்-ஆலயத்தில்
அர்சனை மலர்களாய் சிதறிக் கிடந்தார்

அப்பா என்ற பண்ணும் அமைதி கொள்ள
அத்தான் என்ற காதல் இசையும் மௌனம் சொல்ல
சுருதி இழந்து சோகம் இசைக்கும் இதய வீணை.

எட்டிப்பார்க்கும் கண்ணீருக்குள் மூழ்கியும் மூழ்காத சோகம்
எரிநரகாய் மாறிட்ட நெஞ்சுக்குள்-உலாவிடும்
எந்நாளும் அன்பு மழை பொழிந்த சொந்தம்

ஒரு நொடிக்குள் உறவுகள் அழிந்திட
பல யுகங்களாய்க் சோகம் மனதை வாட்டிட
இறைவா ஏன் இந்தச் சோதனை?

கொஞ்சி மகிழ்ந்த குஞ்சும், காதல் அஞ்சுகமும்
கல்லறைகளில் தூங்கிட, உலாவந்த வீடு
சுடுகாடாய் வருத்திட, உறங்காத நெஞ்சத்தை
நாளும் சிலுவையில் அறையும் மறையாத சோகம்

உருகி எரியும் மெழுகுதிரி-அணைய முன்-உயிர்கள்
அணைந்து போயின, ஊதுபத்தியின் வாசம் மறையமுன்
அன்பு மனங்கள் கலைந்து போயின.
மனைவியும் குழந்தையும் ஒன்றாய் மடிந்து
மாலை சூடிய படங்களாயினர்

இதழ்கள் சிதறி மலர்கள் சிதைய- உதிரம்
சிந்தி உயிர்கள் மடிய, ஒற்றை குயிலாய் மனமும் கரைய
கண்களில் காயாத ஈரம்
நெஞ்சில் அவியாத எரிநரகம்

அகால மரணத்தின் பேரவலத்தை புதிய கல்லறைகள்
காட்டி நிற்க, மலர்களும், மெழுகுதிரிகளும் சோகம்
சொல்லி அழுதிருக்க கண்ணீர் கறை படிந்த முகங்கள்-
நெஞ்சில், காலத்தால் ஆறாத ரணங்கள்.

ஆலயங்களும் கல்லறைகளாகி , ஆன்மாக்கள்
புதுப்பிறப்படையும் கருவறையாய் மாறிட
மதவாதத்தால் மானுடத்தை பிரித்த ஆஸ்திகம்
சமதர்மம் பேசி அன்பை வளர்க்கும் நாஸ்திகம்

அன்பு வாழும் இதயங்களில் ஆண்டவன் குடியிருக்க
பகைமை வாழும் நெஞ்சங்களில் தீமை குடியிருக்க-
தொடரும் தேவ அசுர யுத்தங்களோ?
அல்லாகு அ∴க்பரும்-சலாம் அலேக்கும்
அமைதியை குலைக்கும் சப்தங்களோ?

பலியை அல்ல இரக்கத்தை விரும்பும் இறைவனுக்கு
நரபலிகளும் ஏனோ? மாறிடம் உலகில்
மதப் பயங்கரவாதம் சாத்தானின் வேதங்களோ?

(A naturalized Australian born in Sri Lankan
lost his wife and daughter
at St. Sebastian Church, Negombo, on easter bomb blast)

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-06-2023

Manik Suriyaaratchi

Manik Suriyaaratchi and her 10-year-old daughter Alexendria were killed in the blast at the church in Negombo.

'They died in my hands': Father describes moment wife and daught...
www.sbs.com.au/news/article/they-died-in-my-hands-father-describes-moment...

காதலர் தினம்

அழகோவியம் கண்டு அதிசயித்தேன்-நாணிப் பூத்தாள்
பூவாய் பூத்த பூவையை இரசித்தேன்
சூடிகொள் என்றாள் ஆண்டாள்

கவிதை சொன்னேன், பூ விழிகளால் காதல் சொன்னாள்
வண்ணப்பூவின் காதலுக்கு
வாசப்பூக்களால் நன்றி சொன்னேன்

இமயச் சோகத்தை இதயம் சுமக்க
இன்றும் உள்ளம் தள்ளாடித் தவிக்க
பூக்களை கொடுத்தவனுக்கு-முட்களைத் தந்தாள்
புன்னகை பூத்தவனுக்கு கண்ணீரைப் பரிசளித்தாள்

நெஞ்சமும் புண்ணாக-நேசமும் பொய்யாக
தேவதாஸாய் என்னை அலையவிட்ட பார்வதி
கன்னியர் காதலுக்கு ஏது விதி ?

புன்னகையும் பொலிவிழக்க-
கண்களில் நீர் துளிர்க்க-காயமான இதயம்-
மாயையான கன்னியர் உலகம்.

பூக்களால் காதலைச் சொல்லிடும் காதலர் தினமோ
வருடத்தில் ஒருநாள், பாக்களால் காதல் சொன்ன
பாவலன் இதயத்தில் முள்ளைச் சொருகிய
கன்னியின் நினைவோ வாழ்நாள்

காதலர் தினம் பாவலனுக்குச் சோகமானது
ஆறாத காயத்தை ஆற்ற வழியின்றி இதயம் முகாரி பாட
விழிகள் கண்ணீர் மாலை கோர்க்க-கவிஞனுக்கு
காதல் வரமா சாபமா புரியாத புதிரானது?
காமனை எரிக்கச் சிவனுக்கும் காமன் கணையும்
நரகவாதையோ? மஜ்னுவிற்கும், தேவதாஸிற்கும்
மாறாத கண்ணீர்க் கதையோ?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-06-2023

காதலில் விழுந்தேன் ?

காதலில் விழாதவரும் உண்டோ?
கண்பார்த்து நெஞ்செழுதும் காவியத்தை
பாடாத இதயமும் உண்டோ?
இதயம் மீட்டிய முதற் காதலின் இன்னிசையை
கேளாத நெஞ்சும் உண்டோ?

காதலில் விழுந்தேன் -எழுவதிலும், வீழ்வது
காதலில் இன்பமெனக் கண்டேன்
இன்பத்துப்பால் என வள்ளுவன் பாடியது
பொய்யாமொழி என அறிந்தேன்

காதலில் விழுந்தே காதல் இன்பத்தை திகட்டாத
தெள்ளமுதை சுவைத்தேன்-மலைத்தேன் என மலைத்தேன்
காதல் கடலில் கரை மறந்தேன், நீந்த மறுத்தேன்-
மூழ்கும் சுகத்தில் மோட்சம் அறிந்தேன்
காதலியாள் அருட் கடாற்சத்தில்
முற்றும் துறந்தேன்-காதல் முனியானேன்.

பூவை கண்டு வண்டாய் மனம் ரீங்காரம் இசைக்க
அழகை இரசித்து- காதலை ருசிக்க
காமன் கணை பட்டு காதலில் விழுந்த மனம்
விந்தையாய் இதயத்தின் வலியை ருசிக்கும் குணம்

கன்னி முகம் கண்டு,
காதல் லயம் கொண்டு துடிக்கும் மனம்
வண்ணம் கொண்ட வாசனைப் பூச்செண்டில்
காதல் மதுவுண்டு போதையில் தள்ளாடும் தினம்

காலம் போன பின்பும் நெஞ்சில் நிலைத்த
வண்ணம் குலையாத ஓவியம்
கண் பார்த்து நெஞ்செழுதிய-காவியம்

நெஞ்சு துடிக்க- நேசம் பொங்க வஞ்சி
மகளைக் காணத் துடிக்கும் மனம்
கனவும், நினைவும் அவளாகி அவளின்றி
வாழ்வில்ல எனத் தள்ளாடும் தினம்.

முல்லைச் சிரிப்பில் உதிர்ந்த முத்துக்களை மாலையாய்த் தொடுத்தே
தன்னை மறக்கும் மனம், நாணச்சிரிப்பில் கன்னம் சிவக்க
கோவை இதழ்களில் தேனும் சுரக்க, வண்ண விழிகளில் கயலும் துள்ள
காதல் தூண்டில் போடும் தினம்

இவள் கண்பட -கதிர் பட்டு விழிக்கும் கமலமாய் மனம்-
பெண் மனம் விரும்பம் பொன் மானுக்காய் வில்லேந்தி காடேகும்
ஸ்ரீராமனின் காதல் உள்ளமோ என்னிடம்

கொலுசொலியும், கைவளையும் கட்டியமாக
இதயமும், செவிப்புலனும் கேட்கத் தவிக்கும் இன்னிசை
கண்படும் திசையெல்லாம் கன்னிப் பூக்கள் மணந்தும்- மனம்
காந்தவூசியாய் இவள் திசை நோக்கித் துடிக்க
என் காதல் காந்தப் புலமான தேவ மகள்

காணாத ஒரு நாழிகையும், கண்களுக்கு பல யுகமாகும்
கண்டு பேசிய பல நாழிகைகளும் சில நொடிகளாகும்.
காலம் அழிந்த காலத்தில், காதல் தேசமாய் மலரும் இதயம்

காதல் காயங்களோ, கயல்விழி தழுவாமல் ஆறாது
என் விழியும் அவள் தரிசனம் இல்லாது
இரவிலும் இமைக் கதவை மூடாது

காதலில் விழுந்தே , தேவதாஸாய் -மஜ்னுவாய் புண்பட்டும்
காதல் பொல்லாதது என்றுணர்ந்தும் காதலில் விழத்துடித்தேன்
காதல், காதல், காதல், காதல் இல்லையேல் சாதல் என்றே
மனம் துடித்தே காதலில் விழுந்தேன்

ஏவாளைக் கண்ட, ஆதாமாய் மனம் களிப்போடு கவிபாட
கண்பார்த்து நெஞ்செழுதும் காவியத்தை ஏதேனில் மனம் அரங்கேற்ற
முக்கனியிலும் தேன் சுவை , முத்தமிழாய் இவள் சுவை என்றேன்

கனிமொழியிலே சப்தஸ்வரங்களிலும் இன்னிசை
கார்குழலிலோ மலர் வாசம், பொன் மேனியிலோ பரிமளம்
என் மனதில் இவள் வாசம், என் மனமோ இவள் வசம்
கயல் விழி பட்டு புல்லரிக்கும் மேனி
கனி மொழி கேட்டு-காதல் இசைக்கும் மனமோ இசைஞானி

காதலில் விழுந்தே-கானக்குயிலின் மோகன ராகத்தில் மனம் கரைந்தேன்
வசந்தம் வாழ்த்துச் சொல்ல, மனம் ஆனந்த நர்த்தனம் புரிய
நூதனமாய் என் மனதின் உணர்வுகள்
காதலனாய் உருமாறும் வண்ணப் பொழுதுகள்

வாழ்வெல்லாம் வசந்தம் என்றாக
கவிதையும், கானமும் எனதாக
ஏதேன் வனமும், ஏவாள் இவளும் இறைவன்
எனக்களித்த வரமாக, ஆதாம் என் முதற் காதல்

காதலில் விழுந்தே என்னைத் துறந்தேன்
நானே அவளாக-எல்லாம் இனிதாக
என் மொழியும் கவிதையாக
என் விழியெல்லாம் கனவாக-நெஞ்சுக்குள்-
வானவில்லின் வர்ணங்கள்-இதயத்தில்
காதல் கோகிலத்தின் இன்னிசை கீர்த்தனங்கள்-
ஆனந்த நர்த்தனங்கள்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-06-2023

காதலின் மறுபிறப்பு

எண்ணம் ஒரு கொடியாய் வஞ்சிக்கொடியை சுற்றிப் படரும்,
புவியைச் சுற்றும் நிலவாய் -இதயம் அவளைச் சுற்றித்
துடிக்கும், காதல் வேள்வியில் மனமோ ஆகுதி-ஒலிக்கும்
இதய கீதமாய் காதலே நீயே என்தன் குபேரநிதி

வண்ணக் கனவாய் நெஞ்சை நிறைத்தவள்
வாசமலராய்ச் சுவாசத்தில் மலர்ந்தவள்
காகிதப்பூவாய் நான் நாறிட-
என்னை மறந்தே தூரப் பறந்து போனாள்.

காதல் நெஞ்சம் தீக்குளிக்க, கண்ணீர் கங்கைகளும்
எரிக்கும் காதல் தீயை அணைக்க முடியாது தவிக்க
என் வசந்த மாளிகையில் வௌவால் கூட்டங்கள்
என் இதயவீணையில் முகாரி இராகங்கள்.

கண்பேசி, அலை பேசியில்-அலுக்காது கதைபேசி
கவிதையால் காதல் விருந்து பரிமாறி
அங்கம் தொடாமல், அணைப்பும், முத்தமும் அறியாமல்
வேள்வியாய் வளர்த்த காதல் தீ அணைந்த மாயம்தான் என்ன?

மனதில் கூடுகட்டி மரங்கொத்தியாய் மனம் கொத்தி
விளையாடியவளும் என்னை மறந்து போனதென்ன?
முழுநிலவும் மறைந்து, முப்பது நாளும் அமாவாசை என்றாகிட
முற்றிக் கனிந்த காதல் கனியை வௌவால் கொத்திப்போனதென்ன?

சொல்லியழ முடியாத -சோகத்தை
நெஞ்சுக்குள் புதைத்து, கண்ணீரால் கரைக்க முடியாத
பிரிவை மதுவால் மறக்கத் துடித்து
மெல்ல மடியும் காதலனாய் என்னைத் தொலைத்தேன்

மலரான காதலும், முள்ளாக மனதிலே
ஆறாத காயம், கவிதை பாடிக் களித்த
கவிஞன், ஒற்றைக் குயிலாய் தனிமையில்
கரைந்திட, வாழ்வே மாயம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-06-2023

கவிதையும், கீதையும்

சந்தக்கவி புனைதல் எம் அழைப்பல்ல
“பாஞ்சஜன்ய” சங்கின் முழக்கமாய்
சத்தியத்தின் அறைகூவலாய்-புதிய குருஷேத்திரத்தில்
அக்கினி அம்புகளாய் என் படைப்புக்கள்

மாதர் அழகைப் பாடி-மதிவதனம் எனக் கூறி
காதலியின் பூங்குழலைக் கோதி வாசம் முகர்ந்து
இது இயற்கையா?, இல்லை செயற்கையா?
என வாதிடல் எம் பணியல்ல

சொற்குற்றம், பொருட் குற்றம் தாண்டி
சாதிய நிலை நின்று-வாதிடுவதும் கலையல்ல
இறையனார், நக்கீரர் பெருமைக்கு அழகல்ல

கும்பி வாடும் ஏழையின் பசி தீர்க்க- குரல் கொடுத்து
அப்பாவித் தமிழனுக்கும் அடங்காத் தமிழனுக்கும்,
யுத்த வெறியர்க்கும், இனவாதிகளுக்கும் எதிராய்
ஏவிடும் அக்கினி அம்புகளாய் என் கவிதைகள்

இவை மாலைக்கும், கைதட்டலுக்குமான மாதவியின் நடனமல்ல
பாண்டியன் அநீதிக்காய் சிலம்பெடுத்த கண்ணகியின் சீற்றங்கள்.
எதுகை மோனை கொண்டு-கவிதைக்கு ஏற்றம் இறைத்தல் நம் பணியல்ல
என் எழுத்து கவிதையல்ல, காலத்தில் விழித்த ஓர் எரிமலையின் குமுறல்

வேதியர் நாளும் ஓதிடும் வரண்ட வேதமல்ல-
அபினியும், போதையுமான மதங்களைப் புரட்டிப் போட்டிட
கார்ல்மார்க்ஸின் புரட்சி நெம்புகோல்

சிந்தனையைத் தூண்டி, வந்தனை, வரவேற்பைத் தாண்டி
மானுடத்தைப் பிரிக்கும், பிரிவினை வாத அரியணையைப் புரட்டிடும்
பகுத்தறிவுப் புரட்சியின் செங்கோல்.

பண்பட்ட நிலமாய் மனங்கள் மாறிட
எழுதுகோல் எனும் உழவாரத்தால் மனங்களை உழுது
உண்மையை விதைக்கும் என் சின்னஞ்சிறு முயற்சி
களியட்டம் முடிந்திட காய்ந்த பின் அணைத்திட
களியாட்டத்திற்கும், குளிர் காயவும் மூட்டிய நெருப்பல்ல
இது அகத்தே மூட்டிடும் அகக்கனல்

வெறி கொண்ட வேங்கைக்கும், நெறி சொல்ல , எம் பேனா
அஞ்சவில்லை, பலி கொள்ளும் அரியும் மனந்திரும்பிட
யோவானாய் கர்ச்சிக்க மறக்கவில்லை

இது கதிரல்ல-இருள் சூழ்ந்த உலகில் ஏற்றிய மெழுகுதிரி
நிலவல்ல-காலத்தால் அணையும் சுடர் அல்ல
காற்றாடியல்ல-வீசும் திசையெல்லாம் ஆடிட
இது கொடி மரம் வீழ்ந்தாலும், விழுதுகள் சாய்ந்தாலும்
வித்துக்கள் முளைக்க மீண்டும் அவதாரம் எடுக்கும் விருட்சம்

சந்தக் கவிதை புனைந்து-முத்தமிழை
சிந்தை மகிழ வாழ்திடும் பெரியோரே-
முச்சங்கம் வளர்த்த தமிழை வெள்ளையர்
வீரமா முனிவனும் வளர்த்தே இன்புற்றார்

கம்பனும், வள்ளுவனும், இளங்கோவும் காவியம் பாட
பாரத விடுதலைக்காய் சுதந்திரக்கனல் எடுத்து
கவி படைத்தான் புரட்சிக்கவிஞன் பாரதி.

புலம்பெயர்ந்த தமிழிரும் நலமாய்
எந்தையும் தாயும் வாழ்ந்தது இந்நாடே-
சிந்தையில் சந்தம் எழக் கவி பாடுதல்- ஒரு வழி

இனவாதப், பயங்கரவாத தீயில் நீராடி
கண்ணீரிலும், செந்நீரிலும் மாலைகள் கட்டி
நெஞ்சில் சோகச் சிதைகள் எரிய-சொந்தங்கள் நாம்
புரிந்திட கோர யுத்தங்கள் ஏனோ? சிந்தித்துப் பார்

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு-நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வு
உரிமைகளைப் பகிர்ந்து வாழ்ந்தால் நாட்டுக்கு உயர்வு
அடக்கி ஆண்டால் அனைவருக்கும் அழிவு?

கொட்டிடும் கொரோனாவின் போர் முரசை கேளாமல்
தூங்கிடும் இறைவனை, தூங்கியது போதும் எழுந்திடு என
தூக்கம் கலைக்கும் இடி ஓசை எம் மொழி

சிலைகளைத் தொழுது-சடங்கினை நடத்திடும் மதவாத முகமூடிகள்
கிழிந்திட-மூட நம்பிக்கை அழிந்திட, வாழ்ந்தறியும் உண்மையே
இறைவன், தூய மனத்தவருக்கே சத்திய தரிசனம்
உள்முக தீர்த்த யாத்திரைக்காய் எம் அழைப்பு
விழிப்புணர்வைத் தூண்டிட எம் படைப்பு

அல்லாடும் ஏழையர் உலகில்-இருப்பதோ
இருபது செல்வந்த நாடுகள்- திருச்சபையில் குபேரநிதி
விற்று ஏழைக்கு கொடுத்தல் வறுமை போக்கும் வழி

கேட்பதற்கும், அரியனையைப் புரட்சி இன்றி காப்பதற்கும்-
திருப்பலிகள், பூப்படையாத கன்னிக்கோ சுயம்வரங்கள்
வேதனை, வெட்கம், துக்கம், சத்தியத்திற்கு சான்று பகிர்ந்தவரை
மதவாதிகள் சிலுவையில் அறைந்து கொன்றார்-உயிர்த்தவரைத்
தொழுத சீடர்களோ மதவாதம் படைத்தார்

சிந்தனையில் சத்தியம் உதிக்க-புத்தர், இயேசு
பெருமான்கள் போதனைகளை வாழ்வாக்க
சமத்துவ சத்திய சமுதாயப் புரட்சி மலர-மானுடமே
ஒன்றுபடுங்கள், உலகம் நம் வீடு, இறைவன் நம் தந்தை,
இறை மக்கள் நாம் சகோதரர் அன்றோ?

போராட நானும் நீயும்தான் என்றே போராடுவோம் -
புரட்சி கவி படைப்போம்-தீயில் நீராடுவோம்
அக இருளை அழிப்போம். அன்னையை-அருந்தமிழை-
பாடி, நெஞ்சில் கனல் எடுப்போம்

கற்பனைத் தீ அவிய-சொப்பனத்திலும் எரிமலையின் வடிவெடுப்போம்
சிங்கமாய் கர்ச்சித்து சீறும்புலியாய் போராட முடிவெடுப்போம்
பொய்மைக்கு எதிராய் போர் தொடங்க
பூவையர் இடையை-கொங்கையை பாடிய பாவலரும்,
தமிழ் எடுக்கட்டும் கவி புனையட்டும், அறப்போர் தெடங்கட்டும்

அதோ மகாத்மா அரை நிர்வாணப் பக்கிரி-கதிரவன்
மறையாத பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை கலங்கடித்த செம்மறி
சுட்டுச் சாய்த்த மதவாதம் அகிம்சை சுடரை அணைத்திட
இருளில் மூழ்கிய பாரதம்

இதோ இயேசு- உண்மையின் வடிவெடுத்த ஓங்காரம்
உதிரம் சிந்தி தம் உயிர் ஈந்த அறப்போராளி.

அதோ- குருஷேத்திரத்திலும் குழல் இசைத்த வேனுகோபாலன்
ஆயுதப் புரட்சியின் அதிசய வடிவம், இதோ போதியின்
நிழலில் அமைதியில் அமர்ந்த புத்த பெருமான்
அமைதியின் அருள் வடிவம்.

கவிதைப் பரிமாணங்களில் என் படைப்புக்கள்
என்று ஏதுமில்லை
வெற்றுப்புல்லாங்குழல் நான் -இசைக்கும்
இசைஞானியோ அவன

பாதைகள் வேறானாலும் பயணங்கள் ஒன்றே,
எரிக்கும் நெருப்பும்- எரியாத நீறும் வெவ்வேறு-
நான் வேறு, நீ வேறு
நம்முள்ளிருக்கும் சுயமோ ஒன்று-
அறிந்தால் சுகமே!

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-15-06-2023

கொள்ளை அழகு

கள்ளமாய்க் கயல் விழிகள் கவ்விக்களிக்க
கொவ்வை இதழ்களில் குறுநகை பூத்து மலரக்
கொள்ளை அழகை மனம் கொள்ளையடிக்க
கள்ளச் சிரிப்பால் நாணிச் சிவந்த பூங்கன்னங்கள்

முத்துப்பற்களும், மோகனச் சிரிப்பும்
என்னைச் சொக்கவைக்க
எண்ணிக் களிக்க எண்ணத்திலும் இவள்
காதலாகித்'தேவதாஸாய் துடிக்க
என் இதயத்திலும் பார்வதியாய் இவள்.

மதுமலர்க் கூந்தலில் மல்லிகை மணக்க
குவளை விழிகளில் காதல் தேன் ததும்ப-நிலவோ?,
மலரோ?, நிலம் வந்த காதல் தேவதையோ?
இவள் என மனம் வியக்க-கன்னி அழகு

நித்திலவல்லி , செல்வப்பூங்கோதை
நித்தம் என் நெஞ்சில் உலாவும் காதல் தேன் நிலவு
காதல் பித்தனாய் என்னை மாற்றிக் கவி பாட
வரம் ஈந்த கலைமகளின் மகளாய்ப் பேரழகு.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-06-2023

கொரரோனா வைரஸ்

வல்லரசாய் மாறியும், நல்லரசாய் மாற விரும்ாத
அசுர சாம்ராஜ்யங்களில்-நாளும் ஆயுத வேள்விகள்
அனுவாயுத அரக்கனைத் தோற்றுவித்தும்
உயிரியல் கொல்லிகளை வேண்டிடும், அசுர யாகங்கள்

வூகான் வேள்வியில் பிறந்த உயிர்கொல்லி தப்பியதோ?
தப்ப விடப்பட்டதோ? புதிராக, கொத்துக் கொத்தாய்
மனித உயிர்கள் மடிந்திட-மறுத்து
மௌன விரதம் காத்திடும் சீன அராஜகம்.

மாண்டவர் தொகை அறியாமல், புதை குழிகளும் தோன்றாமல்
சாம்பலாகும் உடலங்கள், சாந்தி தேடி-கடலில் கரைந்ததோ
மண்ணில் புதைந்ததோ? யார் அறிவார்? எல்லாம் மர்மம்

உலகெங்கும் உயிர்கொல்லி பரவிட, காலதேவனின் மணிமுடியாய்
அதன் தோற்றம் காட்சி தர, நாய்கள் குரைக்காமல்
கூகையும், கோட்டானும் அலறாமல், பசுக்களும் கதறாமல்
மௌனத்தில் கரைந்த மரணதேவனின் காலடி ஓசைகள்
கோயில் மணி ஒலிக்காமல் சாம்பலாகும் உறவுகள்.

தடுப்பு மருந்தின்றி- மருத்துவம் தடுமாற
உலகப் பொருளாதாரம் ஆட்டம் காண
கலையாத கனவாய் தொடரும்
யுத்த வெறியர்களின் வல்லரசுக் கனவுகள்.

மலையளவு துயரம் மனதை நொறுக்க
கையளவு மனசுக்குள் கடலளவு துயரம்-
இறைவனையும் சீனா தனிமைப்படுத்திட
இறைவா உனக்கும் கொரரோனாவா?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-06-2023

கோவிட் 19

We are here to awaken
from
our illusion of
Separateness-

The world is afflicted by
death and decay.
But the wise do not
grieve,
having realized the
nature of the world-
Buddha

உயிர்க்கொல்லி, கொரோனா உலகை அச்சுறுத்த-
நாளும் ஆயிரமாயிரமாய் உயிர்கள் மடிய-மனம்
இரட்டைக் கோபுரங்களாய்ச் சரிய, விடியலின்றி
மருந்தின்றி, இருள் சூழுந்த உலகம்

நம் பிறப்பு ஒரு விபத்தல்ல-வெறுமனே
விந்தும், முட்டையும் இணைந்த ஆண் பெண் உறவல்ல
வாழ்வு பெரும் கொடை

நாம் சகோதரர் என்பதை விழிப்புணர்வில்
அறிந்திட நம் அழைப்பு, நம் வாழ்வு
நம் கையில், நாம் தொற்றுக்குள்ளாகாமல், நம்மால்
பிறர் தொற்றுக்குள்ளாகாமல் காப்பது-அன்பு.

நம்மை நாம் நேசித்தால்-நாம் தனித்திருப்போம்
பிறர் அன்பால் பசித்திருப்போம்.
தொற்றுகை பரவாமல் விழித்திருந்து, முன்
எச்சரிக்கை முறைகளை முறையாய்க் கடைப்பிடிப்போம்

சிந்தனையில் உண்மை, நம் புரிந்துணர்வில் தெளிவு
நம் பேச்சில் கனிவு, நற்செய்கை –
நல்முயற்சி நம் வாழ்வு

வாழ்வைத் தியானமாக்கி
விழிப்புணர்வோடு அன்பை பகிர்ந்து வாழ
நமக்கு கிடைத்த அரிய சந்தர்ப்பம்.

தொடுதல் தாண்டி, தனிமை நம் தியானமாக
வாழ்வின் அர்த்தம் தேடுதலாக, அகப்பார்வை அறிய
மூன்றாம் கண்ணாய் விழிப்புணர்வு

பிரபஞ்சத்தோடு இணைந்ததே வாழ்வு,
ஒருவரோடு ஒருவர் நம் இணைப்பு- நான், நீ
பிரபஞ்சம் வேறல்ல, எல்லாம் ஒன்றுக்குள் ஒன்று

மடிந்த வித்து முளைத்திட-நாற்று ஒளியை நாடுகின்றது
அக இருளைக் களைந்து ஒளியைத் தேடுதலே வாழ்வு.
இருளல்ல , ஒளியே நம் இருப்பு

"**ஒளி உண்டாகுக**"-இருப்பின் முதல் வார்த்தை
ஓங்காரத்தின் முதல் அதிர்வு
உடல் அழிகின்றது-ஆன்மா அழிவதில்லை
அதுவாய் நாம், அறிந்தால் சச்சித்தானந்தம்

பாதை மாறும் நேரமிது-
மனமாற்றத்திற்கு அழைப்பாய்-***கொரோனா***
யோனாவின் புதிய பரிணாமம்

படையும், பேரழிவு ஆயுதங்களும் தாண்டி, வல்லரசுகளும்
வலுவிழக்க-கடலும் மலையும், காற்றும் கடந்து
கண்ணிற்கு தெரியாத வைரஸ்
மானுடத்தை ஆட்டிப் படைக்க -இது விபத்தல்ல

தக்கன பிழைத்தலின் தெரிவல்ல-
நம்மை நாம் அறிய
நம் தேடலுக்கான இறை அழைப்பு
மனமாற்றத்திற்கான அழைப்பு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-06-2023

கூடார வாசிகள்

கனக்கும் இதயம் சோகத்தால் நிறைய
கண்ணில் நீர் வடிய, மண்ணில் உறவுகள் புதைய,
அகதிகளின் **ஆறாம் தொழுகை**-ஆறாத சோகத்தில்
அல்லாவை எழுப்பும் அழுகை

காற்றில் கிழிந்து, கடும் குளிரில் நடுங்கி
வெயிலில் காய்ந்து, மழையில் நனைந்து-பாலையில்
சிதறிக்கிடக்கும் பல்லாயிரம் கூடாரங்களில்
புன்னகை மறந்த அகதிகள்

தீராத யுத்தத்தின் ஆறாத இரணங்கள்
அகதிகள் இதயத்தை வருத்த- காயாத
காயீனின் இரத்தத்தில் -அல்லாவை
எழுப்பிடும் ஓயாத கூப்பாடுகள்

அரைவயிற்றுக் கஞ்சி உணவாக, கண்ணீரில் வுழு செய்து-
அல்லாவை தொழும் கோலம் வாழ்வாக-கண்ணிற்குப்
புலப்படாத காலன் கொரோனாவின் காலடித்தடங்கள்
எட்டும் துாரத்தில் ஏழைகளின் கூடாரங்கள்

நீருக்கும், சவர்க்காரத்திற்கும், நித்தம் கையேந்தும் அகதி வாழ்வில்
கைககழுவுதலும், தனிமைப்படுத்தலும்-வல்ல அல்லாவின்
வல்லமைக்கும் சவாலாக, செஞ்சிலுவை சங்கத்தின் தோள்களில்
இயேசுவும் சுமக்காத பெருஞ்சிலுவை

யுத்த பூமியெங்கும் சிந்திய இரத்தம் காயமுன்
காலனின் புதிய அவதாரமாய்
இரத்தமின்றி, சத்தமின்றி உயிர் பறிக்கும்
கொரோனாவின் அச்சுறுத்தல்கள்

யுத்தமோ, மதப்பயங்கரவாதம்-கொரோனாவோ
அன்று பார்வோனை அச்சுறுத்திய -இன்று
மானுடத்தை மனந்திரும்பிட அழைத்திடும்
வல்ல யாவேயின் புதிய ஆயுதமோ?
மானுடமே மனந்திரும்பு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-06-2023

குழந்தைச் செல்வம்

உளி கொண்டு செதுக்காத சிற்பம்
உயிர் மெய் கலந்து-நல்லறமான இல்லறத்தில்
கணவன் மனைவி
காதலால் செதுக்கிய உயிர்ச்சிற்பம்

காதல் காமம் கடைந்திட விளைந்த அமுதம்
வண்ணம் கொண்டு எழுதாத உயிர் ஓவியம்
காதலின் அன்புக் காவியம் குழந்தைச் செல்வம்

தந்தை தாய் என்ற தவநிலைக்கு
இறை அருளிய இன்பப் பெரு வரம்
அம்மையப்பன் அன்பிற்கு கிடைத்த
பெருநிதி குழந்தைச் செல்வம்.

இன்றோ தாய்மையின்றித் தவிக்கும் பெண்மை
குழந்தையின்றி தந்தை மனம் குமுறுவதும் உண்மை
காதலாகிக் குழந்தை பெற்ற நிலை மாறி
காசு கொடுத்து கருத்தரிக்கும் நிலைமை

விந்தும், கருசுமக்க -வாடகைத் தாய்களும்-
வியாபாரமான உலகில்
வாரிசு பெறும் விஞ்ஞானப் புதுமை?

அநாதைக் குழந்தைகளைத் தத்ததெடுத்த பெற்றோரும
அம்மையப்பன் ஆனார்-பெற்றெடுத்த
குழந்தைகளை தவிக்க விட்டுப்-பெற்றவரும்
விவாகரத்து பெற்றுப் பிரிந்து போனார்.

தாலியும், மாற்று மோதிரமும் நகையாக
கழற்றிக் கட்டும் சம்பிரதாயங்கள் மலிவாக
இல்லறம் துறந்து கூடி வாழும் புது வாழ்வு
மனம் கலவாத வாழ்வில் நறுமணம் ஏது?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-06-2023

குழந்தையும் தெய்வமும்

அம்மாவின் தொடுகை மட்டும் அறிந்த குழந்தை
அம்மா என்று சொல்லத் தெரியாத மழலை,
மகனே என்ற சொல் மட்டும் மறவாத அன்னை
கொரோனாவுக்குப் பலியாகும் அவல நிலைமை

கனியுதிரும், காவோலை உதிரும், காய் உதிருமோ?
இளந்தாயும் உதிர்வதா?-கனிமரம் உதிர்ந்தால்
வேர் சிந்தும் கண்ணீர் யாருக்குத் தெரியும்?
இதயத்தின் வேதனை இறைவனுக்குப் புரியும்?

பெற்ற செல்வத்தை குபேர நிதியாய் காத்த அன்னை உயிரை
கொரோனா மெல்லக் கொறிக்க, கண்டு களித்த விழிகளும்
கடைசியாய் மகன் முகத்தை ஒரு முறை உண்டு சுவைக்கத் துடிக்க
கரங்களும் மார்போடு ஒரு முறை கட்டியணைத்து-அழுகையை
நிறுத்தத் தவிக்க. மரண உறக்கம் தழுவத் துடிக்கும் தாய்.

துடித்து களித்த இதயம்-தன் கடைசித் துடிப்பை இசைக்க
சுருங்கி விரிந்த சுவாசமும் இறுதி மூச்சை விடத் தவிக்க
அன்னையின் விருப்பத்தை ஏற்ற இத்தாலிய அரசு

கவசமாய் மூடிய தாய் மார்பில் பாசமாய்க் குழந்தை ஒட்டிட
அவலமாய் ஒலித்த அழுகை மௌனமாகி ஆனந்தம் சொல்ல
இறுதியாய்த் துடித்துக் களித்த இதயம், சுருங்கி விரிந்த சுவாசம்.
எல்லாம் முடிந்ததென்ற தாயின் ஆசுவாசம்

கட்டியணைத்த அன்புக்கரங்களும் வெட்டிய விழுதாய்த் தளர்ந்திட
கண்டு மகிழ்ந்த தாய் விழிகளும் காட்சி மறையக் களிப்பில் உறங்கிட
கண்ணே போய் வருகின்றேன் இதயம் உருகி விடைபெற
கடைவிழிகளில் உருளும் கண்ணீர், காண்போர் இதயத்திலே செந்நீர்

ஏற்றிய மெழுகும் முற்றாய் எரியுமுன் பாதியில் அணைந்திட
பற்றிய கரங்களுக்குள் பாலகனும் அமைதியாய் உறங்கிட
தன்னுயிரைத் தவமாக்கி, மகன் உயிரை வரமாக்கிய அம்மை
தாயே வாழும் தெய்வம் என்ற உண்மை

அணையும் பொழுதிலும் அன்பை அள்ளி வழங்கிய தெய்வம்
அணைத்த பொழுதிலும் மகனை காத்திட-மனதில்
ஆண்டவனை வேண்டிய தாய்மை, இறுதி மூச்சிலும்-என்
இன்பம் நீ என மகனிடம் அணைப்பால் சொல்லிய அம்மை

விழிநீர் மலர்கள் கடைவிழிகளில் மெல்லச் சொரிய,
பார்த்தவர் விழிகளும் கலங்கி கண்ணீர் மழை பொழிய
பிரிய மனமின்றிப் பிரிந்த தாயின் உயிர்
தாயின் மார்பில் உறங்கிடும் சேயோ இளம் பயிர்

உயிர் கொல்லும் போரில் பகவானின் கீதை
உயிர் போகும் நிலையில் மனுமகனின் எல்லையில்லாக் கருணை
தன்னுயிர் போகும் நிலையில் தனயனைக் காக்க
உணர்வால் சொல்லிய தாய்மையின் கீதை

வாழும் போதும், மடிந்து போகும் போதும்
வாழ்நாள் எல்லாம் பிள்ளைகளுக்கு வரமாகும் அன்னை
தாயே தெய்வம், என்றும் நிலையான உண்மை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-06-2023

குமுறல்

மீன் சந்தையில் பூ விற்கப்போனேன்
வண்ணப் பூக்களின் அழகை, வாஞ்சிக்க யாருமில்லை.
வாசத்தை சுவாசிக்க மூக்குகளுக்கோ மணமில்லை

கள்ளுச் சந்தையில் -பால் விற்கப்போனேன்
கரந்த பாலை வாங்கிப் பருகிட
யாருமில்லை, எல்லோருக்கும் போதை

பன்றிகளுக்கு முன்னால் முத்துக்களைத்
தூவியது என் குற்றம்-சாக்கடை மேயும்
காக்கைகளுக்குச்
சங்கீதம் பாடியது பெருங்குற்றம்

காயும் வான் நிலவை இரசிக்க கூட்டமில்லை
குலிலும் கூட்டத்திற்காய்ப் பாடுவதில்லை
தோகை மயிலும் மனிதருக்காய் ஆடுவதில்லை

காடு, மேடு தாண்டி, பள்ளத்தில் விழுந்தாலும்
கடலைத் தேடும் நதியின் பயணம் முடிவதில்லை
மலரும் புதுப் பொழுதை வரவேற்க மலர்களின் அஞ்சலி-
புள்ளினத்தின் கீதாஞ்சலி, ஒரு நாளும் மாறுவதில்லை

என் கவிதைகளுக்கு இரசிகன் இறைவன்
அவன் தந்தது-அவனுக்கே சமர்ப்பணம்
கேட்கச் செவியுள்ளோர் கேட்டு இரசிக்க
வெற்றுப் புல்லாங்குழலில் அவன் வேனுகானம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-06-2023

மலர் வனம்

முழு நிலவோ, செம்பங்கயமோ முகம்
மது மலர்க் கூந்தலில் மாறாத பூமணம்,
வண்டு மொய்க்கும் கருவிழிகளோ குவளை
வண்ணக் கன்னங்களோ செம்மாதுளை

புன்னகையில் ஒளிர்வதோ நித்திலம்
தத்தும் கிளியோ புதிய ஏதேன் வனம்
செவ்விதழ்களில் தேன்வனம்-கண்டு
காதலாகி துடிக்கும் காளை என் மனம்.

வண்ணப் பூவையோ பரிமளம்
என் மனதிலோ காதலின் நறுமணம்
புன்னகையில் மாறாத அன்பு மணம்
இவளால் தென்றலிலும் நறுமணம்

வண்டாடும் குழல் கண்டு நெஞ்சம் திண்டாட
வாசப் பூவை மொய்த்து நெஞ்சம் காதலைக் கொண்டாட
பொட்டு வைத்த வட்ட நிலவை போற்றி மனம் பண்பாட
காதல் தவமிருக்கும் என் மனம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-22-06-2023

மன்னனின் நட்பு

சுற்றமும், சொந்த பந்தமும் படைத்த இரத்த உறவிலும்
பெரிதாய், அரிதாய் அத்தினாபுரி காவலனுக்கும்
அள்ளிக்கொடுக்கும் வள்ளல் கர்ணனுக்குமிடையே
ஆழ வேர்விட்ட நட்பு

அன்னை கெஞ்சியும் அறவில்லை-அனைத்துமறிந்த
அனந்தசயனன் அறிவுரை கூறியும் உயிரிலும் அரியநட்பை,
அரியனைக்காய், வள்ளல் துறக்கவில்லை-
மன்னனும், மாவீரன் கர்ணனை மறந்தும் வாழ்ந்ததில்லை.

பொறுக்கவா? , கோக்கவா? என கேட்ட மன்னவன் கேள்வியில்
மாசற்ற நட்பின் பெருமை, தம்பியரையும், பாஞ்சாலியையும்
பகடைப் பொருளாக்கிய சூதாடித் தர்மனுக்கு நண்பன் யாருமில்லை.
கர்ணன், துரியோதனன் நட்பிற்கு நிகராய்க் காவியங்களில் எவருமில்லை

நண்பனுக்காய் உயிரையும் கொடுத்த உன்னத நட்பு
நண்பனின்றி, வாழ மனமின்றிப் போராடி மடிந்த மன்னவன் அன்பு
காவியமாய் வாழும் நட்பு, நட்பையும் கற்பாய் காத்த
நண்பர்களோ உலகில் அரிதிலும் அரிது.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-22-06-2023

மனோ சாந்தராஜ்

கல்லூரி நாட்களில் கலந்து பழகாது
கன்னியர் முகம் பாராது, ஒரு வார்த்தை பேசாது
பிரம்மச்சாரிகள் சங்கம் அமைத்தேன்
கல்வியே வேள்வியாக, காலம் களித்தேன்

தாய் வானகம் போனபின்-புரியாத தவத்திற்கு
வரமாய், எல்லாத் தாய்களிலும்-என்
தாயைக் காணும் பேறு பெற்றேன்.

ஊர் வரும்போதெல்லாம் உவகையோடு அழைத்து
தாய்மையின் அன்போடு உணவளித்து
நட்பினைக் கற்பாய்க் காத்து மகிழ்விக்கும்-தாயாய்
இன்று சிநேகிதி மனோ

குங்குமம் நிலைக்க, மங்கலம் செழிக்க
மணவாழ்வு மணந்தே மகிழ்விக்க
பல்லாண்டு பல்லாண்டு வாழ்க
எனப் பாசத்தோடு வாழ்துகின்றேன்

இறை தந்த இனிய நட்பே-எக்
குறையுமின்றி நலம் வாழ
எந்நாளும் என் வாழ்த்துக்கள்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-22-06-2023

நன்றி

அணுவாயுதங்களைக் கண்டுபிடித்த வல்லரசுக்கள் -கொல்லும்
கொரோனாவைக் கண்டஞ்சிட, மருந்தும் தடுப்பூசியுமின்றி
மருத்துவ விஞ்ஞானம் திண்டாடிட, அறக்கொட்டி விழுந்த பயிராய்
மனிதன்-கூவி அழைத்தும் கேளாத தொலைவில் இறைவன்

நதி மூலம், ரிஷி மூலம் காணத நிலையில்
ஆஸ்திகத்தின் மூலாதாரத்தை அசைத்திடும் கொரோனா
தசவதாரத்தைப் பழிக்கும் அசுர அவதாரமோ?

உதிர்வதா இல்லை உறைவதா எனக் கண்ணீர் திண்டாட-
அழுகை ஒலிப்பதா, மௌனிப்பதா என அல்லாட
காலனின் தூதுவனாய், கொரேனா உயிர்களைக் காவு கொள்ள
ஊர் முடங்க, -ஊர்வலமின்றிக் காடு போகும் உடலங்கள்

முகக்கவசமும், தனி மனித இடைவெளியும்
தனிமைப்படுத்தலும் விதியாக, இல்லிடமே சிறையாக
உயிரைப் பணயம் வைத்து மருத்துவம் போராட
உயிர்க்கொல்லி கொரோனாவின் போர்க்கோலம்
மானுடம் மனம் திரும்பிட-இது
யோனா விடுக்கும் புதிய தவக்காலம் ?

தொன்னூற்று மூன்று வயதில்-தொற்றிய கொரோனா-
தொடர்ந்த மூச்சைத் திணறடிக்க-சுவாசக்கருவியால் உயிர் பிழைக்க
பல்லாண்டுச் சேமிப்பை ஒரு நாளில் திருடிடும்
பகற்கொள்ளையாய் தனியார் வைத்தியசாலையின் பற்றுச் சீட்டு

சீட்டை பார்த்த முதியவர் குலுங்கி அழுதிட
பின்னர் செலுத்தலாம் பணம்
மனதை தேற்றி மகிழ்வோடு வீடு செல்லுங்கள்
பணமில்லாதவன் வாழ்வு பிணம்தான் தேற்றிய வைத்தியர்

பணத்திற்காய் நான் அழவில்லை, பிணமாய் வாழ்ந்த
நிலைக்காய் அழுகின்றேன், மண்ணாய் வாழ்ந்திருந்தால்
விளைநிலமாய் பலன் கொடுத்திருப்பேன்
மரமாய் வாழ்ந்திருந்தால் கனி கொடுத்திருப்பேன்

விலங்காய் வாழ்ந்திருந்தால்-இறந்தபின் கழுகுகளுக்கு
விருந்தாகியிருப்பேன், மனிதனாய் பிறந்து இறைவனை மறந்த
இழிவாழ்விற்காய் அழுகின்றேன்

இத்தனை காலமும் சுவாசித்த உயிர்க்காற்றுக்கு
இறைவன் ஒரு போதும் கூலி கேட்டதில்லை
சில நாள் சுவாசக்கருவியால் சுவாசித்த காற்றுக்கு-
மருத்துவக் கூலியோ பல்லாயிரம் டொலர்கள்

நன்றி சொல்லாத வாழ்வு-நமனுக்கே என்றாகிட
நலமாய் வாழும் காலம் இனி இறைவனுக்கே என்றாக
தொண்டுக் கிழவனும் மண்டியிட்டு
மனதுருகி கண்ணீர் பெருக இறைவனைத் துதித்தார்

எத்தனை கருணை இத்தனை காலம் என்மீது நீ வைத்தாய்-
நித்தம் சுவாசிக்கும் உயிர்க்காற்றும் உனதாக
ஒளியும், மழையும், ஓயாத கடலும்
வானும், நிலவும் மண்ணும் இலவசம் என்றாக
எத்தனை சுதந்திரம் தந்தாய்

நன்றி நீ கேட்டதில்லை-தந்தையே
நன்றியுள்ள நாயும் வாலாட்ட மறந்ததில்லை
நானோ நாயிலும் கேவலமாய்-நன்றி மறந்து,
நின்னை இழந்து ஆணவத்தில் வாழ்ந்தேன்

அன்பு காட்ட நீயோ மறக்கவில்லை
என்னை மன்னிப்பாய் அப்பா
வாய்விட்டழுதார் பெரியவர்-வெட்கத்தால்
ஆடிப்போனார் வைத்தியர்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-26-06-2023

நட்பு

அன்புத் தாயை வரமாய்ப் பெற்றேன்
இன்பத் தமிழ் மேல் தீராக் காதலுற்றேன்
சங்கப் புலவன் உன்னிடம்-என் பாட்டைச்
சமர்பித்து அறிவுரை கேட்கின்றேன்

விருந்துண்டேன்- அருமருந்துண்டேன்
உன் விமர்சனம் கண்டு மனம் நெகிழ்வுற்றேன்
நல்லாசனாய் நீ கூறும் நல்லுபதேசம் கண்டு
"நல்ல பெருமானே" பெருமிதமுற்றேன்

நான் வளரப் பொழியும் மழையாய்,
போடும் நல் உரமாய் உன் விமர்சனங்கள்
நான் ஏறும் படிகளாய், உன் அறிவுரைகள்
நன்றி நண்பா நன்றி

தவழும் குழந்தை இது, எழுந்து நடக்க முயல்கையில்
தடுமாறித் தவறி விழுவது இயல்பே-வளர்ச்சியின் புது வடிவே.
என் தமிழ் வளரத் தாயாய் உதவு, நல்லாசனாய்
அறிவுரை தொடர்ந்தும் கூறு- கூறு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-26-06-2023

உறவும் பிரிவும்

வாழ்வு முடிவற்றது-அன்பு அழிவற்றது
நிலையான அன்பிற்கு பிரிவில்லை
மரணத்திற்கு அன்பைப் பிரிக்கவும்,
அழிக்கவும் ஆற்றல் இல்லை

உடல்கள் மடிந்தாலும்-இதயத்தில் பூத்த
உணர்வுகள் மடிவதில்லை
உடன் பிறப்பைபோல் இனிய
உறவு ஏதுமில்லை

வறுமையோ வளமையோ
இளமையில் ஒரு கூட்டில் வாழ்ந்ததுபோல்
வாழ்வில் இன்பம் என்றும் இல்லை
ஆற்றுவதற்கு வார்த்தைகள் இல்லை
தேற்றுவதற்குத் தாயும் இல்லை

உன்னைத் தேற்ற என்னிடம் ஏதுமில்லை
காலம் காயத்தை ஆற்றும், கடவுளே நம் துணை
அவன் தந்தான், அவன் எடுத்தான்
எல்லாம் அவன் செயலே-இன்ஷா அல்லா.
போற்றுவது நம் கடனே

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-26-06-2023

நீலோற்பலம்

வான் நீலமெல்லாம், வண்ண நிலவிற்கு ஆடையாக
தேனின் திகட்டாத இனிமை செவ்விதழ் சுவையாக-மல்லிகை
கார்குழல் வாசமாக, முத்துப் புன்னகை வாரிக்கொள்
என்னை, வரிந்து அணைத்துக் கொல் எனக் காதல் சொன்னதே

பூமேனியில் நாணம் பூத்தாட, பொன்னிதழ் விரித்த புன்னகையில்
முத்துக்கள் கூத்தாட, முத்துக் குளித்து முத்தெடுத்து
முத்தமழையால் என்னை நீராட்டு, பூரித்து நாணிய விழிகளும்
பூவையின் காதலுக்கு தூதானதே, மனம் துள்ளுதே!

பிரமன் அழகால் தாளித்த பொற்சித்திரம், நனவிலும்
கனவிலும் என்னைக் கொல்லும் மன்மத அஸ்திரம்
நான் சூட மலாந்த நீலோற்பலம்,நெஞ்சுக்குள் மலர்ந்த
காதல் உற்சவம்-இவள்தான்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-26-06-2023

பச்சைக் கிளி

கட்டிக் கரும்படி நீ எனக்கு, கடித்துச்
சுவைக்கும் காதல் வேழமடி நான் உனக்கு
காமன் கணையடி நீ எனக்கு, பட்டுத்
தவிக்கும் காதல் மானடி நான் உனக்கு

உண்டு போதையுறும் மதுவிலும்-அழகே
கண்டு போதையுறக் காதல் மதுவாய் மாது நீயடி
காதல் பௌர்ணமி நீயடி-என்றும்
என் இதயவானம் உனதடி

அழகு பழுத்த ஆரணங்கோ செம்மாங்கனி-அன்பே
உனக்காய்த் தவமிருக்கும் நானோ காதல் முனி
இடையோ பூங்கொடி-நீ
தழுவத் துடிக்கும் கொழு கொம்போ நானடி

கண்களால் என் நெஞ்சைக் கொத்தும்
காதல் மரங்கொத்தி-காளை மீனாய்
என்னைப் பிடித்த காதல் மீன் கொத்தி

உந்தன் காதல் வீணை நானடி-கலைமகளே
உன்னால் என்னில் காதலின் அமுதசுரங்களடி
இதழ்களில் தேன் கள்ளடி, காதல் விடாய் தணிக்க
தேவதையே வரம் தருவாயடி

கண்களால் என்னைக் கொஞ்சும் அஞ்சுகமே
உன்தன் ஜோடிக் கிளி காதலே நானடி
கயல்விழி நீயடி, காதல் தூண்டில் போடும்-
இதயம் எனதடி,

கட்டுடலோ மலர் மஞ்சம்-காளை நெஞ்சம் கோருவதோ காதல் தஞ்சம்,
பூ மேனியோ சுகந்தம், என் இதயத்திலோ காதலின் புது வசந்தம்
காதல் முல்லையே, வள்ளலாய் காதல் ஈந்து என் இதயத் தேரில் படரடி
காதல் கானம் பாடி, வானம் பாடிகளாய் பறந்திட வரம் தருவாயடி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-27-06-2023

பார்த்தேன் இரசித்தேன்



பெண்பாவையைத் தேடி கங்கையில் கண் பார்வை தவிக்க
பூம்பாவையைக் கண்டு புள்ளி மானாய் மனம் துள்ளிக் குதிக்க
பார்வைகள் கலந்து பரவசத்தில் சங்கமிக்க-விழிகள்
தழுவி நெஞ்சங்கள் பூரிக்க-பூ முகத்தில் நாணம்,
இளைய நெஞ்சங்களில் காதல் பூத்த வசந்தகாலம்

நடையும் நாட்டியமாக-நூல் இடையும் மெலியுமோ,
வளையுமோ என என் மனம் துடிக்க-பூஞ்சடை ஊஞ்சலாட
நிலம் பார்த்து நிலா நடந்துவர, நித்தியமல்லிகையின் வாசம்
என் சுவாசத்திலோ காதலின் புது வசந்தம்

இதயம் ஏங்க, சுவாசம் மயங்க, இவளின்றி வாழ்வில்லை
காமன் கணை பட்டு புண்பட்டுக் காதல் மனம் தவிக்க
கண்களால் தழுவி காதலால் தேற்றிய அருந்ததி
என் இதயத்தை களவாடிப்போன காதலின் சங்கநிதி

முன்னழகோ ஒரு பூவனம், பினனழகோ பூங்குழல்
அசைய கலாபமயிலாடும் நந்தவனம்.-காதல் வசப்பட்ட
என் மனமோ வேடன் வலைப்பட்ட மானினம்

நிலவாய் மலர்ந்து மலராய்ப் புன்னகை பூத்து, கனி முகம் காட்டி
மைவிழிகளால் நெஞ்சில் காதல் மொய் எழுதிட, மெய் சிலிர்க்க,
உயிர் இனிக்க கண் பார்த்த அழகு, கற்பகத்தின் பூங்கொம்போ,
காமன்தன் பெருவாழ்வோ, விற்குவளை பவளமலர் மதி பூத்த
விரைக்கொடியோ?, பெரியாழ்வாரை நினத்து வியந்து மயங்கியதே



கனி சுவைக்க காதல் கிளி கொத்தாத கன்னி
கண்களால் என்னைக் கொத்திய காதற் பைங்கிளி
தழுவிக் களித்த விழிகள் பிரிய மறுக்க-குவியத்தூரம் கடந்தும்-
நெஞ்சில் குவிந்த கன்னியின் விம்பமோ பேரின்பம்

ஊடலின் துன்பம் என்னைக் கொல்ல, பாலும்,
தேனும் இனித்தே பூவையின் காதல் இன்பம் சொல்ல
காதல் நோயுற்றே, கன்னி வசப்பட்டேன்
காமன் கணை இனிதென இன்புற்றேன்

நீர் மொள்ள வந்த காப்பிய மங்கை என் நெஞ்சை
அள்ளிப் போன காதல் கங்கை, நீராட வந்த வைகை-
என்னைக் காதல் நதியில் மூழ்கடித்த யமுனை

குடத்தோடு, குவி முலையின் அழகோடு
மன்மத விடத்தோடு
வந்த கன்னி, கண்களால் என்னை கொத்தி
காதல் விஷம் தந்த காமினி

நீராடி, நீர் மொள்ள வந்த கங்கையை-காதலால்
என் விழிகள் நீராட்டி, நெஞ்சுக்குள் மொள்ள,
பொங்கும் பூம்புனலான காதல் நெஞ்சம்
கன்னியிடம் கோரியதோ காதல் தஞ்சம்

இவளின்றி வாழ்வில்ல, இவளே என் காதல் உலகு
மனம் தள்ளாட, கண்ணாளா உன் காதலை அறிவேன்
என்ற பாவம் பூ விழிகளில் பூத்தாட, செவ்வாயில் குறு நகை
கூத்தாட, கண்களால் காதலைச் சொன்ன பௌர்ணமி

இடையோ மின்னல், நடையோ நாட்டியம்
மொழியினில் தேன்-முறுவலில் முத்தம்
கனவும் நினைவும் காதல் சுரத்தில் என்னை வாட்ட
பொன்மேனி தழுவிப்- பெண் இன்பம் அறிய,
சித்தன் என்னைப் பித்தனாக்கிய பேரழகி



மஞ்சமும் முள்ளாகி, நெஞ்சமும் தணலாகி வருந்த
அஞ்சுகத்தின் நினைவுகளில காதல் அருஞ்சுகம்
கனவிலும் வருத்த, நெஞ்சிலே வஞ்சியின் காதல் ஊர்வலம்
பசி மறந்து, பஞ்சணை துறந்து நாளை வருவாள்
என் நாயகி என்றே, கங்கைக் கரையில் என் காதல் தவம்

கயல்விழியாள் கொத்திய காதற் காயங்கள்
முத்தமும், முக்கனியுமாய் நெஞ்சில் இனிக்க
சுவாசத்தில் அவள் வாசம் சந்தன முல்லையாய் மணக்க
கள்ளிலும் போதை காமத்துப்பால் என்றே வியந்த மனம்

மன்னரையும், காவியக் கன்னியரையும் வாட்டிய காதல்
என்னையும், வாட்டிய உண்மையைச் சொல்லக்
கவிதை படைத்தேன்- மனம் கவர் மங்கையிடம்
என் காதலைச் சொல்ல கங்கையில் தவமிருந்தேன்
காதலனாய், காதல் வரம் பெற்றேன்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-27-06-2023

பெண்மையின் மேன்மை?

யுத்தவெறியர்களின் வாங்கொலியாய் ஓயாத குண்டுச்சத்தம்,
தொழுது மகிழ்ந்த மசூதிகளும் மண்ணோடு மண்ணாக
அன்னையர், கன்னியரை வல்லுறவு செய்து-வல்ல
அல்லாவைப் பழிக்கும் அராஜக மதவாத யுத்தம்

யுத்த சத்தங்கள் ஓயவில்லை, சிந்திய இரத்தங்கள் காயவில்லை
புகையும், நெருப்பும் அணையவில்லை-கன்னியர்
விதவைகளின் அவல நிலை மாறாத கண்ணீர்க் கதை.



வான்தாக்குதலில் சிதைந்த கட்டிடமோ வாழிடம்
கண்ணீரோடு தொழும் விதவைக்கு இறைவனோ புகலிடம்
இளமையும், அழகும் எதிரியான சிறுமை-குழந்தைகளின்
பசி தீர்க்க உணவும், நீரும் சவாலான கொடுமை

வயிற்றுப் பசி போக்கிட -காமுகர்க்கு காமப் பலியாகும் வாழ்வு
வல்லுறவால் நாளும் சாவு-அபாயாவுக்குள் நிர்வாணம்
வன்முறைவாதிகளுக்கு கிட்டாத நிர்வாணம

“I kept telling him it hurts – please stop,” said the girl, whose body is so small an adult could circle her waist with two hands. “He told me that according to Islam he is allowed to rape an unbeliever. He said that by raping me, he is drawing closer to God,” she said in an interview alongside her family in a refugee camp here, to which she escaped after 11 months of captivity.



விதவையின் புலம்பலில் கேவிக் கரையும் குயிலின் சத்தம்
வல்லுறவுக்கு பலியான கன்னியின் புலம்பலில் மௌனராகம்
நரகான உலகில் நலியும் நம்பிக்கை-அல்லாவைக்
கதறியழைக்கும் தாய்குலத்தின் கண்ணீர் நதி
அளவற்ற அருளாளனோ அண்ணகான அநீதி

வல்லுறவுக்கு ஆளான இளநெஞ்சுக்குள்ளோ காங்கை
உயிரை மாய்த்திட வற்றிய கண்ணீர்க் கங்கை
அல்லாவை எள்ளி நகையாடிய பெண்மையோ மேன்மை
யுத்தத்தில் வல்லுறவும் அல் குரான் நீதியான சிறுமை

Question 13: Is it permissible to have intercourse with a female slave who has not reached puberty?

"It is permissible to have intercourse with the female slave who hasn't reached puberty if she is fit for intercourse; however, if she is not fit for intercourse, then it is enough to enjoy her without intercourse."

வல்லுறவும் யுத்தத்தில் தொழுகையான அவலம்-விறைத்த குறிகளோ
சிறுமிகளுக்கு துப்பாக்கி முனைகளிலும் கொடூரம்
வல்லுறவால் காமம் தணிக்கும் விலங்கு-ஐவேளை தொழுதும்
தணியாத காமம், ***விலங்கைப்*** பிணைத்த **இரும்பு *விலங்கான*** அவலம்
விலங்குகளால் விளங்கிட முடியாத மதவாதம் விபரீதம் ?

“He said that raping me is his prayer to God. I said to him, ‘What you’re doing to me is wrong, and it will not bring you closer to God.’ And he said, ‘No, it’s allowed. It’s halal,’” said the teenager, who escaped in April with the help of smugglers after being enslaved for nearly nine months.

சுன்னத்தாலும் நீங்காத, அபாயாவால் மூடியும்
அணையாத அசுர ஹோமம்-காமம்
இறைவன் இறந்துவிட்டான் நீட்ஷேயின் வாதம்-அபினியும்
போதையுமாய் மதம்-கார்ல் மாக்ஸின் கீதம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே

Pax Ravichandra-15-06-2023

சாக்கடை மல்லிகை

காமத்தில் பிறந்ததோ?-காதலில் பிறந்ததோ?-
குழந்தைச் செல்வங்கள், இறை கொடைகள்
குப்பைகளாய் நாறிச், தெரு நாய்களாய் அலைந்திட
செய்த குற்றம்தான் என்ன? இறைவா கூறு?

மனமத லீலையை மாமுனிகளும் வெல்லத் தவறிய உலகில்
காமத் தீயில் வெந்த மெய்கள், பொய்யாய் கூடி மெய்யின்பம் களிக்க
கர்ம வினை தீர்க்க –கருப்பைக் குழிக்குள்
காலம் விதைத்த விதைகளாய் ஏழைக் குழந்தைகள்?

காதலும், காமமும் தூவிய விதைகள்
கல்லிலும், முள்ளிலும், பாதையிலும் விழுந்திட-
பயிர்களே பாழாகிக் களைகளாய் மாறிட-செல்வக்
காமக்காளைகளின் மேய்சல் பூமியாய் ஏழைச் செல்விகள்

விறைத்த ஆண்குறிகளும்-புடைத்த ஈரயோனிகளும்
கூடிக்களித்த இன்பத்தில்-மலிவாய் பிறந்த
குழந்தைச் செல்வங்கள் குப்பைகளாய்க் கிடக்க
ஏழ்மை குற்றமா? காமம் பாவமா?

காதலும் ஒரு போகம்- மலிந்த காமமும் பெரும்போகமாக
காதலும் காமமும் தூவிய விதைகள் களைகளானதோ?
குப்பைகளாய் தெருவோரம் வீசிட-காமுகரும்,
விபச்சாரிகளும் கைவிட்டு போன நீதிதான் என்ன?

கல்லில் தலைவைத்து, வயிற்றில் பசி வைத்து-வாயில்
அம்மா என்ற சொல் வைத்து, கண்ணீரை விழிக்குள் உறையவைத்து
உறக்கத்தை தெருவில் களிக்க-பசி மறந்திடத் தூக்கம் மருந்தாக,
மலிந்த மானுடக் கருணைதான் என்னே!

நீ பட்ட கொடிய வாதைகளோ சில மணி நேரம்
குழந்தைகள் படும் துன்பமோ வாழ்நாள் துயரம்
வாழ்வே கல்வாரியாக-வறுமையோ வருத்தும் ஏரோதாக
எரிநரகான வாழ்வு, நாளும் சிலுவைச் சாவு?

காக்கும் கடவுளே உன் கருணைதான் என்ன?
குழந்தைகளை என்னிடம் வர விடுங்கள் மொழிகள்தான் என்ன?
அநாதைகளாய் தெருவில் இரந்து வாழ- வாழ்வு அவர்கள் தெரிவல்ல
தக்கன பிழைத்தல் மனித தர்மமும் அல்ல, விதி நீதியுமல்ல

பறை நாய்களாய் தெருவில் அலைந்து
பசிக்காய் கை நீட்டி கரைந்தழ, கண்களில்
தெரியும் பசிக்களை பல்லாயிரம் பேரை போஷித்த உன்
கண்களில் படாத கருணைதான் என்ன?

கல்லான மனிதர் நடுவே இறைவனும்
கல்லானான்- சிலையானன்
காணாத சூனியமானான் ஞானிகளுக்கு
நிர்வாணியானன் உண்மைதானா?

அண்ணகனாய் பிறத்தல் வரமாய் அமைய -இறையரசுக்காய்
அண்ணகனாதல் அரிதிலும் அரிதாய் அமைய-ஆணுறையும்-
கர்ப்பத்தடை மாத்திரையும் மலிந்த காலத்தே-குழந்தைகளை
குப்பைகளாய் வீசி எறியும் கொடுமைதான் என்னே?

கிறிஸ்து மீண்டும் வருவார் எனக் காத்திருப்போர் மத்தியில்
நாளும் நீ வருவதை யாரும் காணவில்லை
துன்புறும் கிறிஸ்துவாய்க் குழந்தைகளைக் காண
கிறிஸ்தவர் மத்தியில் கிறிஸ்துவாய் யாருமில்லை

காதலில், ஏழ்மையில்- காமத்தில் கருவுறுவது
நீயல்ல என்றால் -யாரேன்று சொல்லு ?
ஏழைக்கு காமம் சாபமா கூறு

ஏரோதும், திருச்சங்கமும் வாழும் உலகில்
எங்கும் ஏழை மதலேனாக்கள் உலாவர
உன்னைத் தேடுகின்றேன் எங்கே நீ என்று சொல்லு ?
எங்கும் நீயே -எல்லாம் நீயே-பொய்யா? கூறு

ஊரெங்கும் கருத்தரிப்பு மையங்கள்-
கருவைச் சுமக்க வாடகை தாய்களுக்கும் கூலிகள்
பிள்ளைச் செல்வத்திற்காய் செலவாகும் இலட்சங்கள்
தெருக்குழந்தைகளுக்கு வாழ்வளிக்க அச்சங்கள்

கல்லைத் தொழும் மூடர்கள்-குழந்தை,
தெய்வம் தந்த வரம் எனும் வரட்டு வேதங்கள்
சாக்கடை மல்லிகை நாறும் எனும் பொய்கள்
குழந்தையும், தெய்வமும் ஒன்று செத்த தத்துவங்கள்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-18.06.2023